கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-௪௰.] சித்திரபானு-ஞ பங்குனி மீ [பகுதி-௫.

Vol. 40. March-April 1943. No. 5.


## உள்ளுறை.


| | | |
|---|---|---|
| நம் தேவை:- | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A. B.L., ஸ்ரீ. R. கோபாலையரவர்கள் | ௧௨௫—௧௩௨ |
| கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்:)- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | ௧௩௩—௧௩௮ |
| மன்னனும் மன்னுயிரும்:- | ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரையங்காரவர்கள் | ௧௩௯—௧௫௪ |
| திருமுருகாற்றுப்படைச் சொற்றொடரகராதி பாடபேதம் பிழைதிருத்தம் விடுபாடல்கள் | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. | 53—62 |



பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 1—8—0.

1943.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 34, Tamil Sangam Road, Madura.

அதற்கு ஐம்பது வருஷங்களுக்குப்பிறகு இந்தச் சராசரி வயது இன்னும் உயர்ந்து நாற்பத்தைந்தாகிவிட்டது. இப்பொழுது இங்கிலாந்திலுள்ளவர்களுள் ஆண்களின் சராசரிவயது ஐம்பத்தாறு; பெண்களின் சராசரிவயது அறுபது.

அப்பு:- இதைப்பற்றி நானும் படித்திருக்கிறேன். இப்படிச் சராசரி வயது உயர்ந்ததற்கு முக்கிய காரணம் இளம்பிராயத்தில் குழந்தைகளுக்கு உண்டாகி அகாலமரணத்தை விளைவித்து வந்த வைசூரி, டிப்தீரியா என்னும் தொண்டையுடைப்பு நோய், பாலவாதம் முதலிய நோய்கள் தடுக்கப்பட்டதுதான்.

கோபா:- ஆமாம். இவற்றுள் வைசூரியைப் பெரும்பாலும் வராமல் தடுப்பதற்கும், டிப்தீரியாவை வந்தபின்னும் குணப்படுத்துவதற்கும், வைத்தியமுறைகளைக் கண்டுபிடித்துவிட்டார்கள். பாலவாதத்துக்கு இன்னும் சரியான வைத்தியமுறைகள் ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அப்பு:- ஆனால், வயதானபிறகும் பல வியாதிகள் வருகின்றனவே. க்ஷயம், மலேரியா, மஞ்சட்சுரம், நுரையீரற்சளி, டைபாய்டு, பிளேக், இன்புளுவென்ஸா முதலிய நோய்களால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் சாகிறார்களே. மலேரியாவினால் கிரீஸ் நாகரிகமும், ரோமராஜ்யமும் அழிந்துபோயினவே. மகோன்னதமான கோயில்களாற் சிறப்புற்றிருந்த அங்கோர்வாட்டில் வாழ்ந்தவர்கள் அடியோடு தொலைந்துபோனதற்கும், மாயாஜாதியாரின் நாகரிகம் நிர்மூலமாகப் போனதற்கும் மலேரியாவே காரணம் என்கிறார்களே. இவற்றுக்கெல்லாம் தக்க பரிகாரமுறைகள் இல்லாவிட்டால் ஜனங்களுக்கும் ஜனசமுதாயத்துக்கும் கஷ்டந்தானே?

கோபா:- இந்நோய்களுக்கெல்லாம்கூடப் பெரும்பாலும் தடைமுறைகளையும், மருந்துகளையும் கண்டுபிடித்துவிட்டார்கள். க்ஷயம் மிகக் கொடியநோய்தான். ஆனால் யூதர்கள்போன்ற சிற்சில ஜாதியாருக்கு இந்த நோய் அதிகம் வருவதில்லை. அவர்களுடைய உடலில் இந்நோயைத்தடுக்கும் ரக்ஷாசக்தி இருப்பதாகத் தெரிகிறது.

அப்பு:- இந்தமாதிரி சக்தி உலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் கிடைத்துவிட்டால் இந்த நோயால் மனிதர்கள் சாக வேண்டாமல்லவா?

கோபா:- வாஸ்தவம். இது அவர்கள் வாழ்ந்துவந்த சூழ்நிலையால் பெற்ற சக்தி. இது கிடக்கட்டும். இந்நோய்களுக்கெல்லாம் பெரும்பாலும் தடைமுறைகளையும் மருந்துகளையும் கண்டுபிடித்துவிட்டார்கள். நுரையீரற் சளிக்கு மிகவும் கைகண்ட மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துச் சிலகாலம் ஆகிறது.

அப்பு:- தெரியும். ஸல்பா மருந்துகள் என்று சில மருந்துகளைக் கண்டுபிடித்து வழங்கிவருகிறார்கள். இனிமேல் நுரையீரற் சளியினால் ஒருவனும் மாளவேண்டியதில்லை என்று சொல்லும்படி அவ்வளவு சிறந்த மருந்து இவற்றுள் ஒன்று.

கோபா:- ஆனாலும் இன்புளுவென்ஸா, சாதாரண ஜலதோஷம், கான்ஸர் முதலியவற்றுக்கு இன்றளவும் கைகண்ட மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அவற்றையும் கண்டுபிடித்துவிட்டால் நோயினால் சாகிறவர்களுடைய தொகை குறைந்துவிடும். அப்போது மனிதர்களுடைய சராசரி வயது இன்னும் உயர்ந்துவிடும்.

அப்பு:- அதெல்லாம் இருக்கலாம். அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா எங்கும் மலிந்து, சதாரணப் பிறந்தநாட்கொண்டாட்டம் மாதிரி ஆகிவிடலாம். ஆனால் வயது அதிகமானால்மட்டும் என்ன பிரயோஜனம்? தலை நரைத்து, பல் விழுந்து, கண் தெரியாமல், காது கேளாமல், நடை தளர்ந்து, கூனிக் குறுகி வயதுமட்டிலும் குட்டிச்சுவருக்கு ஆன மாதிரி. ஆனால் யாருக்கு என்ன பிரயோஜனம்? கிழவன்பாடும் கஷ்டம்; கூடவாழவேண்டியவர்கள்பாடும் அதைவிடக்கஷ்டம். கிழவனாக ஆகாமலே மார்க்கண்டேயன்மாதிரியாக என்றென்றைக்கும் இருப்பதற்கு வழியிருந்தால் நல்லதல்லவா?

கோபா:- அதற்கும் வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள். உயிரின் தத்துவம் இன்னதென்று அறிவதற்கும், வளர்ச்சி என்றால் என்ன என்று தெரிவதற்கும் விஞ்ஞானிகள் கீழ்த்தர உயிர்களை ஆராய்கிறார்கள். அமீபா என்னும் சிற்றுயிருக்குக் கிழத்தனம் கிடையாது. அது வயதுமுதிர்ந்து கிழமாகிச்

செத்தது என்பது கிடையாது. ஆனால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டுத் தீர்மானம் அடைவதுண்டு. பாமேசியம் என்னும் சிற்றுயிருக்கும் கிழத்தனம் கிடையாது. கிழட்டு ஹைட்ராவை இரண்டு துண்டாக்கினால், ஒவ்வொரு துண்டும் இளம்பிராயத்திலுள்ள ஒரு ஹைட்ராவாக ஆகிவிடும்.

அப்பு:- நாற்பதுவயதுள்ளவன் ஒருவனை இரண்டு துண்டாக்கினால் இருபதுவயதுள்ள இரண்டுபேர்கள் கிடைப்பார்கள் என்றிருந்தால் விசித்திரமாயிருக்கும்.

கோபா:- சிறிய அற்ப உயிர்களை ஆராய்ந்து, நம்முடைய மூப்பை நீக்கமுடியுமா என்று முயலுகிறார்கள். மூப்பு இல்லாமல் தடுத்துவிட்டால் இளமை நிலைத்திருக்குமல்லவா?

அப்பு:- அமெரிக்காவில் ராக்கெபெல்லர் வைத்திய ஆராய்ச்சிச் சாலையிலும், ஐரோப்பாவில் ஜெர்மனி முதலிய சில நாடுகளிலும், உடலின் உறுப்புக்களையும், அவற்றின் சிறு பகுதிகளையும் தனியாகத் துண்டித்து வெளியே எடுத்து, தக்க உணவுப்பொருள்களையுடைய திராவகங்களால் அவற்றைப் போஷித்து, அவற்றினின்று உண்டாகும் கழிவுப் பொருள்களையும் அகற்றி, அவற்றை மிகவும் கூர்ந்து, சோதித்துவந்திருக்கிறார்கள். இவ்வாறு தக்க முறைகளைக் கையாண்டுவரும்போது உடலினின்று வேறுபட்ட உடலுறுப்புக்களும், அவற்றை அமைக்கும் சிற்றணுக்களும் தம்வலிகுறையாமல், தம் செயலிலும் குறைவுபடாமல், மூப்பும் சாக்காடும் இன்றி, வெகுகாலம்வரை வாழக்கூடும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்; இந்தப் படித்திருக்கிறேன்.

கோபா:- நீ சொல்வது சரி. இப்பேர்ப்பட்ட சோதனைகளிற் சிலவற்றை நான் என்கண்ணால் நேரே பார்த்திருக்கிறேன். செய்தும் இருக்கிறேன். இந்த அறிவையெல்லாம் தொகுத்துப் பயன்படுத்தி மனிதனுடைய தேகத்திலுள்ள உறுப்புக்கள் வலிகுன்றாமலும், செயற்றிறத்திற் குறைவுபடாமலும் இருப்பதற்கு வழி கண்டுபிடித்துவிட்டால் நாமும் அமரர்கள் ஆகிவிடுவோம்.

அப்பு:- ஆனால் கோபாலா...

கோபா:-கொஞ்சம் பொறு, அப்புஸ்வாமி. நமது உடலிலே உள்ள இரத்தக்குழாய்கள் தடித்துப் போகாமலும், உடலுறுப்புக்களிற் கசிவுறும் கழிவுப்பொருள்கள் உடலிலேயே தங்கிவிடாமலும், தேகத்திலுள்ள பல உறுப்புக்களும் ஒத்துழைப்பதற்கு இன்றியமையாத ஹார்மோன்கள் என்னும் சத்துக்கள் உடலினுள்ளே இயற்றப்படுவது குன்றாமலும் இருப்பதற்கு உரிய முறைகளைத் தெரிந்துகொண்டு, கையாண்டுவருவோமேயானால் மூப்பு வராது; ஆயுளும் நீளும்.

அப்பு:- ஆரோக்கியமும் ஆயுளும் மட்டிலும் நீண்டால் போதுமா? ராவணனுங்கூட எத்தனையோ ஆயிரம்வருஷம் வாழ்ந்தான் என்று ராமாயணம் சொல்லுகிறது. ஆனால் அவன் தொலைய மாட்டானா என்றுதானே எல்லா ரிஷிகளும் தேவர்களும் பிரார்த்தித்தார்கள் என்று சொல்லப்படுகிறது? குணம் வேண்டாமா?

கோபா:-மிகவும் சரி. குணம் இருந்தால்மட்டும் உலகம் நன்மையடையும். மனிதகுணத்தைச் சீர்திருத்த அநேகம் இடங்களில் சங்கங்களை ஸ்தாபித்து முயன்றுவருகிறார்கள்.

அப்பு:- தர்மோபதேசம் செய்வதற்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கங்களைப்பற்றிச் சொல்லுகிறாயா? அல்லது விஞ்ஞானமுறையில் ஆராயுஞ் சங்கங்களைப்பற்றிச் சொல்லுகிறாயா?

கோபா:-விஞ்ஞானமுறையில், விஞ்ஞானலக்ஷியத்தோடு ஆராயும் சங்கங்களைப்பற்றித்தான் சொல்லுகிறேன். இவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வாழைப்பழ ஈ முதலிய கீழ்த்தரப் பிராணிகளின் வம்சபாரம்பரைகளை ஆராய்ந்து, குணங்கள் சிற்சில முறைகளை அநுசரித்து வம்சபாரம்பரையில் இறங்குகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். பிராணிகளின் ஸெல்களின்நடுவில் நியூக்ளியஸ் இருக்கிறதல்லவா? அதற்கும் உள்ளே குரோமஸோம் எனப்படும் மெல்லிய நாடாப்போன்ற இழைகள் இருக்கின்றன. அவற்றுக்கும் உள்ளே அவற்றிலும் நுண்ணிய ஜீன் அல்லது குணி எனப்படும் மிகமிக நுண்ணிய அணுக்குக்கள் இருக்கின்றன.

இவற்றுள் ஒவ்வொன்றும் பிராணியின் உறுப்பு ஒவ்வொன்றின் தோற்றத்தையும், தன்மையையும், இயல்பையும் நிர்ணயிக்கிறது. அதாவது, தேகநிறத்துக்கு ஒரு குணி, உருண்டைக்கண்ணுக்கு ஒரு குணி, சப்பை மூக்குக்கு ஒரு குணி, குட்டைமயிருக்கு ஒரு குணி என்று இப்படி ஒவ்வொரு குணத்துக்கும் ஒவ்வொரு குணமின்மைக்குங் கூட ஒவ்வொரு குணி உண்டு.

அப்பு:- இப்படியுள்ள குணிகள் மொத்தம் எத்தனை என்று கண்டு பிடித்திருக்கிறார்களா?

கோபா:- இல்லை; முடியவும் முடியாதென்று தோன்றுகிறது. அற்பப் பிராணிகளுக்கு இருப்பதுபோலவே மனிதனுக்கும் செல், நியூக்கிளியஸ், குரோமஸோம், குணி எல்லாம் உண்டு. மனிதனுடைய குணிகளும் எண்ணிறந்தவை. உடலின் நிறம், மயிரின் தன்மை, கண்ணின்வடிவு முதலியவற்றை நிர்ணயிக்கும் குணிகளைப்போலவே, சில குறைபாடுகளைக் குறிக்கும் குணிகளும் உண்டு. உதாரணமாக:—நிறவேறு பாடுகளை அறிய இயலாமை, காயம்பட்டுப் புண்ணாகிய இடத்திலிருந்து இரத்தம் கட்டிப்படாது ஒழுகிக்கொண்டேயிருத்தல், மனத்தளர்வு என்னும் இவைபோன்ற சில குறைபாடுகளுக்கும் குணிகள் உண்டு. இக்குறைவுகளைத் தாங்கும் குணிகளையுடைய ஆண்பெண்களை இனம்பெருகாமல் தடைசெய்துவிட்டால், இவ்வகையான குறைகளையுடைய மக்கட்பரம்பரை பெருகாது. நல்ல குணங்களைத் தாங்கும் குணிகளின் சேர்க்கையினாலும், நல்ல குடும்பம், சிறந்த கல்வி, நல்ல சகவாசம் முதலியவற்றின் நல்லுதவியினாலும் இயற்கையாக உள்ள நற்குணங்களை விருத்தியாக்கி வரலாம். இதனால் மனிதவர்க்கம் மேம்பாடு அடைந்து, சிறந்த குணங்களையுடையதாகும்.

அப்பு:- இப்பொழுது நடக்கும் யுத்தம் முதலியவற்றைப் பார்த்தால் இப்படிச்செய்வது மிகவும் அவசியம் என்றே தோன்றுகிறது.

கோபா:- அறிவாளிகள் அனைவரும் வேண்டுவதும் இதுவே.

அப்பு:- இது கிடக்கட்டும். இத்தனை பாடுபட்டு, குறைவுள்ள மனித வர்க்கத்தின் குணங்களையும் மற்றப்பிராணிவர்க்கங்களின் குணத்தையும் திருத்திசெய்வதற்குப் பதிலாக, நல்ல குணமுள்ள புதுப்பிராணிகளை உண்டாக்கிவிட்டால் என்ன?

கோபா:- இப்படிச் செய்யக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. நம் முடையபூமி தோன்றியகாலத்தில் உயிர் என்பது அதில் கிடையாது, கோடிக்கணக்கான வருஷங்களுக்குப்பிறகு எத்தனையோ இயற்கைச் சக்திகளின் சேர்க்கையினால், ஏதோ ஒருசமயத்தில், தற்செயலாக, மிக அற்பமான ஓர் நுண்ணிய உயிர் எவ்வாறோ திடீரென்று தோன்றிற்று. நாம் புதிதாக உயிரைச் சிருஷ்டிக்கவேண்டுமானால் இத்தனை நிகழ்ச்சிகளும் சக்திகளும் இதே முறையில், இதே அளவில் நிகழவேண்டும். இப்படி நம்மாலாவது இயற்கையாலாவது மீண்டும் ஒருமுறை பூமியில் நிகழ்த்திவைக்கமுடியாது. இது உறுதி.

அப்பு:- இதைப்பற்றி நானும் படித்திருக்கிறேன். வேறு சிலர் இது இப்பொழுது முடியாவிட்டாலும், வருங்காலத்திலாவது முடியலாம் என்ற நம்பிக்கையுடன் முயன்றுவருகிறார்கள். ஆனால், இப்பொழுது நமக்குத்தெரிந்தது என்னவென்றால், ஏதோ எவ்வாறோ தற்செயலாய்த்தோன்றிய அற்ப உயிரானது, நான்தோறும் நிமிஷந்தோறும் பல்லாயிரக்கணக்கான சக்திகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றுக்கு உள்ளாகி வந்தது. இக்காரணத்தால் அது சிறிது சிறிதாகச் சிறு அளவில் வேறுபட்டு உருவமாறுபாடு அடைந்தும்வந்தது. நிகழ்ச்சிகளின் வேறுபாடுகளுக்கும், சக்திகளின் வித்தியாசங்களுக்கும் இணங்க, இம்மாறுபாடுகள் நிகழ்ந்துவந்தன. காலக்கிரமத்தில், பரிணாமமுறையில் இவ்வுயிரானது மாறிப் படிப்படியாக உயர்ந்து, மனித உயிராகப் பரிணமித்து விட்டது.

கோபா:-சரி, ஆனால் இந்தப் பரிணாமமுறையில் முக்கியமாக உள்ளவை இரண்டு. ஒவ்வொரு உயிரும் தன்னுடைய இனத்தை ஒத்து வளரும் குணத்தை உடையது என்பது ஒன்று. ஆனாலும் ஒரு சிறு அளவில் மாறுபடும் தன்மையும் அதற்கு உண்டு என்பது இரண்டு. ஒவ்வோர் உயிரையும் சூழ இருக்கும் நிகழ்ச்சிகளும் சக்திகளும் அதைப் பாதிக்கின்றன; அதனால் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு உயிரால் சூழ்நிலையும் சூழ்நிலையால் உயிரும் சிறு அளவில் மாறுபட்டுக்கொண்டே வருகின்றன. இவ்வகையான மாறுதல்கள் சேர்ந்து குவியக் குவிய, காளடைவில், உயிரானது பேரளவில் மாறுபட்டுவருகிறது. இவ்வாறுதான் பூமியில் இப்பொழுது உள்ள பல்கோடிக்கணக்கான உயிரினங்கள் யாவும்(—தாவரங்களும், பிராணிகளும் மனிதனுங்கூட—)தம் தம் தன்மைகளையும் குணங்களையும், வடிவங்களையும் பெற்றுள்ளன.

அப்பு:- நீ சொல்வதைத் தெரிந்துகொண்டேன். அதாவது, எப்படியோ முயன்று, தப்பித்தவறி ஒருவேளை நுண்ணிய அற்ப உயிர் ஒன்றைப் புதிதாக நம்முடைய சோதனைச் சாலையில் இயற்றிவிட்டாலும், அந்த அற்ப உயிரிலிருந்து மனிதனைப்போன்ற பிராணியை இயற்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் வேண்டும். மேலும், நீ சொல்லிய நிகழ்ச்சிகள் யாவும் முன்னினும் செம்மையான முறையில் மீண்டும் ஒருமுறை நிகழ்ந்தாகவேண்டும். இவையெல்லாம் நடக்கிற காரியமில்லை. இதுதானே நீ சொல்லவந்தாய்?

கோபா:-ஆமாம். ஆகையால் சமுதாய முன்னேற்றத்தை நாடி, இப்போதுள்ள மனிதரையே ஆதாரமாகவைத்துக்கொண்டு, அவர்களின் குணங்களையும், தன்மைகளையும் வேண்டியவாறு மேம்படுத்துவதுதான் முறை. இது நடக்கக்கூடிய காரியம். இதுதான் ஒவ்வொரு ஜனசமுதாயத்தின் தேவையுங்கூட.

---

# கம்பராமாயணசாரம்

## உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

[கஉச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### ச-வது தோத்திரப்படலம்.

*தேவர்முதலியோர் சிவனையும் விட்டுணுவையும் தோத்திரித்து அரக்கரை அழிக்கவேண்டுதலைக் கூறுவது.*

#### மூன்றுலகத்தோரும் சிவனைச் சரணடைதல்

பூலோகத்துள்ளோரும் தேவலோகத்தினின்று துரத்திடப் பட்ட தேவேந்திரன்முதலிய தேவர்களும் முனிவர்களும் நாகலோக வாசிகளும் நரகத்திலே கிடந்தழுந்துவோர்போல நடுங்கி, முன் உலகத்தை அழிக்கவிருந்த ஆலகாலவிடத்தையுண்டு கண்டத்தி லடக்கி உலகங்களை அழியாமற் காத்த பரமசிவனே உலகங்களை அழிக்கும் அரக்கரை அடக்கிக் காப்பானென்று அவனிருந்த கயிலைமலையை அடைந்தார்கள். அடைந்தவர்கள், கயிலாயமான வெள்ளிமலைமேல் பவளமலைபோல வீற்றிருந்த சிவபிரானைத் தரிசித் துத் தோத்திரஞ்செய்தார்கள். அப்போது, பரமசிவன் அவர்களை நோக்கி 'நீங்கள் வந்தகாரணம் யாது?' என வினவ, அவர்கள், 'மாலியவான் முதலிய கொடிய அரக்கர் தேவேந்திரனை வென்று தேவலோகத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். அவர்கள்கூட்டத்தை நீ வேரோடறுக்காதுவிட்டாயானால், உலகங்களையெல்லாம் அழித்துவிடுவார்கள்' என்று கூறினார்கள். 'சுகேசன்வழியில்

தோன்றிய அரக்கரெல்லாரும் என்னையடைந்தோராதலால், அவர்களை நான் என்கையாற் கொல்லமாட்டேன். திருமால் அவர்களைக் கொல்லும் உபாயம் அறிந்தவன், அவனிடம்போங்கள்' என்று அவர்களுக்குச் சிவன் விடைகொடுத்தனுப்பினான்.

### தேவர்முதலியோர் திருமாலைத் தோத்திரித்து அரக்கரை அழிக்கும்படி வேண்டல்

அவர்கள், திருப்பாற்கடலையடைந்தார்கள். அப்போது, அந்தக்கடல் அவர்களெதிரே எழுந்து ஆடி ஆரவாரித்தது, 'திருமாலருளால் தீய இராக்கதர் செல்வமும் செருக்கும் வலிமையும் சிதைந்திடும்; நிலையில்லாமல் சலனமடைந்துகொண்டிருப்பனவெல்லாம் நிலைபெற்றிடும்; வேதங்கள் உயர்வுற்றிடும்; உலகமெல்லாம் உய்ந்திடும்' என்று அவர்கள் மனத்திலே உவகை தழைத்தோங்கும்படி உரத்து உரைப்பதுபோன்றிருந்தது. அலைகள் கரை நோக்கிச்சென்றது, திருமாலைக் காணவந்த அவர்களை வரவேற்கக் கடல் எதிர்கொண்டுசென்றதுபோன்றது. புன்னைமலர்த்தாதும் கடல்நீர்த்திவலையும் கொண்டு உலாவுகின்ற குளிர்ந்த தென்றற் காற்று, அவர்கள் மேனிமீது வீசியது, அரக்கர்படைக்கு உடைந்து நிலையழிந்து ஓடி வாடி வதங்கிக்கொண்டிருந்த அவர்களுடைய தாபம் நீங்கச் சைத்தியோபசாரம்*செய்ததுபோன்றது. உடலை வாட்டித் தவம்புரிவார்க்கும் யோகியர்க்கும் வேதங்களுக்கும் எட்டுதல் இல்லானும், சரணடைந்தார்க்குக் கிட்டுதல் உள்ளானும், ஆதிதேவனுமான திருமாலைத் தெரிசித்தார்கள். அடியார்கள் எம்மருங்கும் நெருங்கிநின்று சேவைசெய்ய, நாரதர் நடிக்க, †மாகதர் துதிக்க, வெள்ளிய பாற்கடல்மேற் கரிய மலைகிடந்தாற்போலப் படுத்துக் கிடந்து உறங்குபவனும், பூதேவியும் சீதேவியும் வருடச் சிவந்த பாதமுடையவனும், கரியமலையை மின்னல்சூழ்ந்தாற்போலப்

*சைத்தியோபசாரம் - தாபம் தீர உபசரிக்கை.

† மாகதர் - வீரம்முதலியவற்றைப் புகழ்வோர்.

பொன்னுடைபுனைந்த திரு அரையையுடையவனும், பிரமனுள்பட எல்லாவுலகங்களும் உள்ளடங்கிய உதரமுடையவனும், மகாமேரு பருவதம் கொட்டையாக, அதைச்சூழ்ந்த மலைகள் அகவிதழ்களாக, அந்த மலைகளைச் சுற்றியுள்ள திசைகள் புறவிதழ்களாக, நாலுவேதங்களையும் பாடிக்கொண்டிருக்கும் நான்முகன் ரீங்காரஞ் செய்யும்வண்டாக உள்ள அண்டம் (வயிற்றன் அடங்கியிருந்தது வெளியேவந்தாற்போன்றது) ஆகிய உந்திக்கமலமுடையவனும், கருங்கடலிலே செங்கதிர் (-உதயசூரியன்) உதித்தாற்போலக் கவுத்துவமணிபுனைந்த மார்புடையவனும்* மலைகளுக்குப் பூண்கட்டியது போல வாகுவலயம்பூண்ட தோள்களையுடையவனும், பல்வரிசையாகிய முத்துக்களும் இதழ்களாகிய பவளங்களும் கண்களாகிய தாமரைமலர்களும் புருவங்களாகிய விற்களும் (காதுகளில் விளங்கும்) குண்டலங்களும் உடைய சந்திரமண்டலம் ஒன்று உண்டானால், அந்தச் சந்திரமண்டலம்போன்ற திருமுகமண்டலமுடையவனும், வலக்கை கிழாக மணிமுடி (அணிந்ததலை) மேலாக வைத்தவனும் ஆகிச் சங்கு சக்கரம் வில் வாள் தண்டு ஆகிய பஞ்சாயுதங்கள்

---

* வண்டென விரிஞ்சன் மாமறை பாட வடவரை கொட்டையாய்ச் சூழ்ந்த
இண்டடங் கிரிக ளல்லியாய்த் திசைக ளிதழ்களாய்த் திகழுமிவ் வண்டப்
புண்டரீ கத்தைப் புறப்பட விட்ட வுந்தியம் பொற்றடத் தானைத்
தெண்டிரைக் கடலி லெழுந்தின கரன்போற் றிகழொளி யாரமார் பினனை.

விரிஞ்சன் - பிரமன். மா - பெருமை(யுடைய). மறை - வேதம். வடவரை - மேருமலை. கொட்டை - தாமரைக்கொட்டை - தாமரைப்பூவின் இதழ்களுக்குநடுவே யுள்ளது. கிரி - மலை. அல்லி - அகவிதழ். புறவிதழ் புல்லி யெனப்படும். பாட்டில் அல்லிக்குப்பின்வந்த இதழ், சிற்குமிடத்தின் ஆற்றலாற் புல்லியை (- புறவிதழை) உணர்த்தியது. அண்டப்புண்டரீகம் - அண்டமாகிய தாமரை. புறப்பட-(வயிற்றினுள்ளிருந்து) வெளிப்பட. உந்தி - கொப்பூழ். தினகரன் - சூரியன். ஆரம் - ஆபரணம் (பின்), தமிழகாதி; இங்கே திருமால் மார்பில் அணியும் மணியாகிய கவுத்துவமணியென்னும் ஆபரணத்தைச்சுட்டியது. 'ஆரம்', மாலையெனக்கொண்டு (இரத்தின) மாலையணிந்த மார்புடையவனென்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும்.

சூழ்ந்துநின்று மெய்காப்புப்பணிசெய்யாநிற்க, கருடன் சுற்றி யுலாவாநிற்க, ஆதிசேடனுடைய தேகமாகிய மெத்தைமீதே, அவன் படங்கள் (குடைகள்போல நிழல்செய்து) கவியாநிற்க, ஓராயிரம் ஊழிகள் ஒருகணம்போலச் செல்லாநிற்க, யோகநித்திரைசெய்யும் திருமாலின் திருவுள்ளம் தங்கள்திறத்தில் இரங்கியருளுமோ அருளாதோவென்று தேவர்கள் முதலியோர் கவலைகூர்ந்துநின்றார் கள். அப்போது தேவேந்திரன் அப்பெருமானைநோக்கிக் கூறுவா னாகி, 'உலகங்களையெல்லாம் (பிரமனாகிப்) படைப்பாய், (விட்டுணு வாகி)க் காப்பாய், (உருத்திரனாகி) அழிப்பாய், (கண்ணனாகி) உண்டு உமிழ்வாய், (திரிவிக்கிரமனாகி) அளப்பாய்; ஆகாயம் வாயு அக்கினி நீர் நிலம் (ஆகிய பஞ்சபூதங்கள்) ஆவாய்; எண்ணிறந்த (அசைவனவும் அசையாதனவுமான) உயிர்களாவாய்; (சூரியன் முதலிய) சுடர்களாவாய்; வேதமாவாய்; சிவனும் பிரமனுமாவாய்; இவ்வாறாக அளவற்ற திருவிளையாடல்கள்செய்வாய்; (மேற்கூறிய பல கண்டப்பொருள்—பகுப்புப்பொருள்–ஆகுதலன்றி) அகண்ட வஸ்து (-பகாப்பொருள்) ஆகவும் உள்ளாய். உன்னை அறிவார் யாரே! (ஒருவருமில்லை)

உடலில் உயிரும், சொல்லிற் பொருளும், மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும்போல, எல்லாப்பொருள்களினும் பொருந்தி ஒன்றுபட்டிருக்கின்றாய். அறிவும் அறியப்படுபொருளும் அறி பவனுமாயுள்ளாய்; உன்தன்மை யாரே அறிவார்!

பொன்னும் பூண்களும் போலவும் கடலும் அலைகளும் போல வும் பூமியும் புழுதிகளும் போலவும், தேவர் மனிதர் முதலிய பல உயிர்களோடு அன்னியமாயும் அனன்னியமாயுமுள்ளாய். உன்தன் மையை யாரே அறிவார்!

நன்றாக ஆராய்ந்துபார்த்தால், உருவமுடையையாவாய், அருவ முடையையாவாய்; உள்பொருளாவாய், இல்பொருளாவாய்; பிறப் புள்ளாயாவாய், பிறப்பில்லாயாவாய்; பெண்ணாவாய், ஆணாவாய்,

ஆலியுமாவாய்; ஒருபகையுமில்லாதிருக்கவும் எதற்காகப் பஞ்சாயுதபாணியாயிருக்கின்றாய்? உன் இயல்பை உரைக்கப்புகுந்தால் மிகுந்த மனக்குழப்பம் உண்டாகின்றது. உன்னை உள்ளபடி உணர்வார் யாரேயுள்ளார்!

பிறவிக்கடலைக்கடக்கும் உபாயமறியாமல், (அக்கடலைக் கடக்கத்தக்க மரக்கலம் இது இது என்று) பலமதங்களிற் சேர்ந்து மயங்கி (சேர்ந்தமதம் அக்கடலைக்கடக்கும்) பயனற்றதாக (வீணே) பிறந்து இறப்பவரெல்லாம் அகண்டாகாரமாய்ப் போக்குவரத்தின்றிக் கவலையற்றிருக்கும் உன்னிலைமையை அறியார். உலகங்களுக் காதாரமாகவுள்ள உன்னிலைமையை யாரே அறிவார்!

மணிகளைக்கோத்துக் கோவையாக்குதல்போல உலகங்களைக் கோவைப்படுத்துவாய். கோவைப்படுத்திய உலகங்களை (வெவ்வேறாக்கி)ச் சிதறச்செய்வாய். உலகங்களையெல்லாம் உண்டு ஆலிலை மேலே தூங்கினாய். (அப்படித் தூங்கினபோது, எல்லாப்பொருள்களையும் தாங்கும் உலகங்கள் உன் வயிற்றினுள்ளேயிருந்தனவாதலால், அந்த) ஆலமரம் எவ்விடத்தே நின்றதென்று தெரியேனாயிருக்கின்றேன்.* இப்படிப்பட்ட உன்னிலைமையை யாரே அறிவார்!

ஒரு தூர் மூன்று கவடுகளுடையதாகிப் பல கிளைகளையுடையதாகிய ஒரு தருவைப்போல (ஒரு மூலத்தினின்று மும்மூர்த்திக

---

* இங்கே,

> பாலன் றனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்
> மேலன்று நீதுயின்றாய் மெய்யென்பர்—ஆல், அன்று
> வேலைநீ ருள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ?
> சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு.

என்ற வெண்பா ஞாபகத்துக்கு வருகின்றது. அன்று - அக்காளில். வேலை - கடல். மண்ணது - மண்ணினிடத்துள்ளது.

ளும் தேவவருக்கம் மனிதவருக்கம் முதலிய பல உயிர்வருக்கங்களும் உண்டாகிய) ஒரு பரம்பொருளாயுள்ளாய்; வினையாவாய்; வினைப்பயனுவாய்; வினைப்பயனை அநுபவிப்பவனுவாய்; வினையை ஆக்குவானும் அறுப்பானும் ஒருவனே ஆவாய். அப்படிப்பட்ட உன்னை அறிவார் யாரே!' என்று தோத்திரித்த தோத்திரங்கள் திருமாலினுடைய செவிகளினுள்ளே செல்ல, அப்பெருமான் நித்திரைநீங்கி எழுந்து, இந்திரன் முதலியோரை அன்புகூர்ந்துநோக்கி, 'நீங்கள் வந்தகாரணம் யாது?' என வினவ, அவர்கள், விடையிறுப்பாராய், 'மாலியவான் சுமாலி மாலியென்ற இரக்கமற்ற அரக்கர் மூவர், தாம் பெற்றுள்ள வரங்களின்வலியினுலும் தம்படைவலியினுலும் எல்லா உலகத்தோரையும் ஊழித்தீப்போல ஒழிக்கின்றூர்கள். அவர்கள் அவ்வாறு உலகங்களை ஒழிப்பதை நீயே நேராகமுயன்று தடுத்துக் காவாவிட்டால், (எல்லா உலகங்களும் அழிந்திடும்) அவைகளைத் திரும்பப் படைக்கும்படி நேரிடும். அவ்வரக்கர் தினந்தோறும் கொலைபுரிதலால், செக்கிலிட்டரைக்கப்பட்ட எள்ளுகளிலே தப்பிக்கொண்ட எள்ளுகள்போல இங்குவந்தவர்களே பிழைத்தோம். எங்களுக்கு நீயே கதி. வேறு கதி யாதுமில்லை! அஞ்சினேம். உன்சரணமே (-பாதமே) சரணமாக (-அடைக்கலமாக) அடைந்தேம். அபயம்! அபயம்!' என்று அலறினூர்கள். திருமால் அவர்களைப் 'பயப்படாதீர்கள்' என்று கையமைத்து 'வெய்ய இராக்கதகுலத்தை வேரறுத்து உங்கள் உள்ளக் கவலையை ஒழித்திடுவேன். இது திண்ணம். நீங்கள் உங்களிருப்பிடஞ்சேருங்கள்' என்றுகூறி விடைகொடுத்தனுப்பினுன்.

௬-வது தோத்திரப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

ஸ்ரீ:

# மன்னனும் மன்னுயிரும்

செந்தமிழ்ப்பயிர்க்குச் செழுமுகிலாகி முந்துறவளர்த்துவருவதோர் மரபிடைத்தோன்றியவரும், தாய்மொழியுணர்ச்சியும், அம்மொழித்தேர்ச்சியுடையாரிடத்து அளவிலா அன்பும், சேய்மொழியாகிய ஆங்கிலப்பயிற்சியும் அமையப்பெற்று, நுண்மாண் நுழைபுலம் மிக்கவருமாகிய மாட்சிமைதங்கிய ரா. ஷண்முகராஜேசுவரஸேதுபதியவர்கள், இவ்வாண்டிற் கொண்டாடப்பெற்ற தம்முடைய 34-வது *வெள்ளணிநாள்விழாக்காலத்திற் பலஅமயங்களிற் பல அரிய *அறிவுரைகளை வழங்கினர். அவ்வுரைகள் யாவும் பண்டிதர்களுடைய பாராட்டுக்குரியனவாய், ஆன்ற கருத்துக்களையடக்கிக்கொண்டு, சான்றோர்மொழிகள்பலவற்றை நினைப்பூட்டும் தகைமைசான்று நிற்கின்றன. அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றனையெடுத்துக்கொண்டு ஒருசிறிது ஆராயலாகும்.

‘இராமநாதபுர ஸமஸ்தானவாசிகள் என்னை அதன் இறையென்று வேறு வைத்துப் போற்றுவர்; யான் அவர்கள்நலத்தை நாடுதற்கமைந்த தொண்டனாக என்னைக் கருதுகிறேன்’ என்பது சேதுவேந்தர் மொழிந்தனவென்று முன்னுரைத்தவற்றுட் காணப்படுவதோர் பொன்னுரையாகும். இது, மன்னற்கும் மன்னுயிர்க்கும் இடைக்கிடந்த தொடர்பையும், மன்னன் மன்னுயிரிடத்துக் கொள்ளத்தக்க மனப்பான்மையையும், ஆங்கே மன்னுயிர் மன்னன்பாற் கொள்ளற்கொத்த மனப்பாங்கையும் செவ்விதின்விளக்கும் சிறப்பிற்றாய்க் கூரியமதியிற் சீரியோர்கூற்றுக்கள்பலவற்றை நினைப்பூட்டிநிற்றல் பின்வருவனவற்றாற் பெறப்படும்.

உலகனைத்துங் காக்கும் ஒருதனிமுதலாகிய கடவுட்குரிய பெயர்களுள் ‘இறை’யென்பதும் ஒன்று. எங்கும் †இறுத்தல்பற்றி அஃது அப் பரம்பொருளை உணர்த்துவதாகும். எவ்வுயிருமனிக்குந் தெய்வத்திற்குரிய குறியாகிய அப்பெயர், இவ்வுலகின்கண்ணே புரவுபூண்டுநிற்கும் அரசற்கும் ஆகி

---

* இவ்விழாநிகழ்ச்சிகளும், அவ்வுரைகளின் சுருக்கங்களும் 39-வது ‘செந்தமிழ்’த்தொகுதியின் 12-வது பகுதியின்கண் வெளிவந்துள்ளன.

† இறுத்தல் - தங்குதல்.

வழங்குகின்றது. மற்றும், அவ்விறைவனது அமிசமாகவே அரசனைப் போற்றுதல் மூத்தையோர்கண்ட முறையாகக் காண்கின்றோம். காவலனிடத்துக் கடவுட்டன்மையுளதென்று கருதுவது மரபாகும். இந்நெறியானே, தெய்வப் புலமைத் திருவள்ளுவரும், மன்னவன் உறுப்பு முதலியவற்றானே மக்களோ டொத்துநின்றானாயினும், மக்களுள் ஒருவனாக மதிக்கப்படாது, அவரிடை நின்று வேறுபிரித்து, அவர்க்கிறையென்றுயர்த்துவைக்கப்படுவான் என்னும் பொருளையடக்கி 'மன்னவன், மக்கட்கிறையென்று வைக்கப்படும்' (குறள்—388) என்றதூஉங் காண்க. இங்ஙனம், இந்நிலவுலகின்கண்ணே பிறமக்க ளோடொப்பத்தோன்றி, உறுப்பாலும், ஊண் உறக்கம் முதலிய செயலாலும், பிறவற்றானும் அம்மக்களுள் ஒருவனாகவே காணப்படுவானை இறைவனாக வேறுகோடலென்னையோ வென்பதுகுறித்துச் சிறிது நோக்குவாம்.

மாநிலத்துற்ற மன்னுயிரெல்லாம், தாமே தம் நெறியறிந்தொழுகி இன்னல்களைந் தினிதுவாழுமியல்பிலவாய்த் தம்மைச் செந்நெறிச்செலுத் தும் நியந்தாவை யின்றியமையாது நின்றுவருவனவாகும். உலகு, ஒரு பொழுதேனும் காவலின்றி நில்லாததென்பதனை, அது, அரசியல்பற்றிய அல்லல்மிக்க அளவினும் காவலைநீக்கிநில்லாது, அவ்வமயம் அரும்பாடுபட்டு அக்காவலை நடத்திச்செல்லும் அரசற்கு அவ்வல்லலை மிகுத்துக் காலத்தில் யாத்திரைசெய்வதாம் என்பது கொள்ளுமாறு, மடுத்தலாயினும் சாகாடு விட்டிறங்காது, அதனை மருங்கொற்றியும் மூக்கூன்றியும், தாடவழ்ந்தும் அரிதின் இழுத்துச்செல்லும் எருத்திற்கு வருத்தத்தை மிகச்செய்துகொண்டு அச்சாகாடுபற்றித் தேயத்தில் யாத்திரைசெய்யும் ஓர் *பங்குவை அதற்கு உவமானமாக்கி, 'ஒருத்தலைப்பாரத் தொருத்தலைப் பங்குவின் †ஊர்தி—யெருத்தி னீங்குநின் றியல்வாக் குழைந்திட ருழக்கும் வருத்தம்'‡ (கம்ப—அயோத்தியா—மந்திர—66) என்று கல்வியிற்பெரிய கம்பர் கூறியது கொண்டுணரலாம்.

அந் நியந்தாவாவான், இங்ஙனம் தன் கோல்நோக்கிநின்ற மன்பதை யனைத்திற்கும் தன்னாலும், தன்பரிசனத்தாலும், பகைத்திறத்தாலும், கள்வ ராலும் பிறவுயிர்களாலும் ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பானுமின் றான். அவற்றது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவும் நீரும்

* பங்கு - முடம். † ஊர்தி - சாகாடு.

‡ இச்செய்யுளுரையின் விரிவை, 28-வது 'செந்தமிழ்'த்தொகுதியின் 6-வது பகுதியின்கண் வெளிவந்துள்ள 'கம்பருவமையம்' என்னும் கட்டுரை யிடைக் காணலாம்.

# மன்னனும் மன்னுயிரும்

உளவாதற்குக் காரணமாதலோடு, அவ்வாறுளவாய [illegible] பாழ்போகாது பயன்படும்முறைகளை நாடிச்செய்து, தன் அறத்தானும் மறத்தானும் நாட்டினை நன்னிலையின்கண் நிறுத்துகின்றான். உடையும் உறையுளும் முதலிய பிறவற்றானும் மக்கள் துன்புறாது வாழ்தற்குரிய வழிகளைச் சூழ்கின்றான். எனவே, இவ்வாறு தன்னலத்தைப் பெரிதென்று பேணாது, மன்னுயிரனைத்தையும் முறைசெய்து காக்குந்தொழிலை மேற்கொண்டுநிற்கும் மன்னவன், அம்மன்னுயிரோடு உறுப்பு முதலியவற்றானொத்துநிற்குமளவேயில்லாது, அவற்றாற் போற்றற்குரிய ஏற்றமிக்க நிலையையெய்திநிற்பானுமன்றோ? இவ்விறைமாட்சிபற்றி 'நெல்லுமுயிரன்றே' யென்னுந் தலைப்புடைய புறநானூற்றுச் செய்யுட்பொருளை விரித்து, 85-வது 'செந்தமிழ்' தொகுதியின் 12-வது பகுதியின்கண் வெளிவந்துள்ள 'புறநானூற்றுச்செய்யுட்சிறப்பு' என்னும் கட்டுரையிற் பார்க்கக் காணலாமாகலின் மீண்டும் ஈண்டு விரிக்காதுவிடுத்து, மன்னன் காப்பவனும், மன்னுயிர் காக்கப்படுவனவாயும் நிற்குந் தொடர்பை நினைப்பூட்டி மேற்செல்வல்.

காத்தல் என்பது, எல்லாவுலகுமுடைய இறைவனது தொழில். அவன் எல்லாவற்றையும் காப்பவன் (ஸர்வரக்ஷகன்) என்கின்றோம். இவ்விறைவனுக்கும் ஏனையெல்லாவுயிர்கட்கும் காப்பானும் காக்கப்படுவனவுமாமியைபு உளதென்று ஆன்றோர் கருதுவர். அங்ஙனம் அவனுக்குரித்தாய அத்தொழிலில் ஓரளவு உலகபாலரிடத் துளதாகின்றது. இறையின் றொழிலாகிய இஃது இங்ஙனம் உலகபாலரிடத் துளதாதலானே, இவ்வுலகபாலர் உறுப்பு முதலியவற்றான் மக்களோடொத்துநிற்பினும் அம்மக்களிற் பிரித்து அவர்க்கிறையென்று வேறுவைக்கப்படுவோராயினர் என்க. இக்கருத்தை,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
இறையென்று வைக்கப்படும்' (குறள் 388)

என்று வள்ளுவர் வாய்மலர்ந்தருளியதனாலறியலாம். இன்னும், இத்தொழில் இறைக்குரித்தாதலானே, அரசன் காவலைகடாத்துங்காலை இறையே அவ்வரசனுருவாய்நின்று உலகுபுரப்பதாகவும், அம்முறையானே அரசன் இறையென்று பெயர்பெறுவதாகவும் ஆன்றோர் உரைப்பர். இதனை 'இறை உலகபாலருருவாய்நின்று உலகங்காத்தலின் இறையென்றார்' (குறள் - இறைமாட்சி - முன்னுரை.) என்ற பரிமேலழகருரையான் அறிதும்.

இம்முறையானே, எவ்வுயிருங் காத்தலைத் தனது சிறப்புத்தொழிலாகக் கொண்டு, உலகனைத்திற்கும் ஒரு தனிக்கிழவனாய்விளங்குந் திருமாலாகவே திருவுடைமன்னர், குறித்துவழங்கப்படுவது கருதத்தக்கது. 'திருவுடைமன்னரைக்காணிற் திருமாலைக் கண்டேனே யென்னும்,' (திருவாய்மொழி 4-4-8) என்று பெரியார் பணித்ததனானே இவர் இங்ஙனம் கருதப்படுதலை அறியலாம். அங்ஙனம் கருதப்படுதலானே, கையேறுசக்கரக்காவலன்செயல்களை வையகத்துற்ற இம் மன்னர்மேல்வைத்து வழங்குவதூஉம் மரபாயிற்று. 'மாதுயிலுக்கு - ஆலைக் கவருங் குலோத்துங்கசோழன்' (குலோத்துங்கன்கோவை - 150) என்பதுபோன்ற ஆன்றோர்வாக்குக்கள் பல இதற்குச் சான்று பகர்கின்றன. 'பெருமைபெற்ற கண்வளர்ச்சிக்கு ஆலிலையை விரும்பும் குலோத்துங்கன்' என்பது இக்கோவைச்செய்யுளடியின் பொருளாதலின், ஆலிலைத் துயிலலாகிய மாலின்றொழில் மாநிலமன்னனாகிய குலோத்துங்கனைக் குறித்தாகக் கூறப்பட்டவாறுணர்க. மற்றும், திருமாலுக்கும் திருவுடைமன்னர்க்குமுள்ள முடிமுதலிய சின்னங்களின் ஒற்றுமையும், அன்ன பிறவும் ஈண் டெண்ணத்தக்கன.

திருமால் காவற்றொழின்மேற்கொண்டுநின்றவன் என்பது பலர்க்கும் ஒப்பமுடிந்தது. பூமடந்தைக்கு அவன் ஒருதனிக்கிழவன் என்பதனை, நாவிஷ்ணு: ப்ருதிவீபதி: என்பதனாலும், பூசூக்தம் போன்றவற்றாலும், அவன், 'உண்டும் உமிழ்ந்தும்,.......' (திருவாய்மொழி 4-5-10) என்று ஆழ்வார் அருளிச்செய்தவாறு உலகையுண்டும், உமிழ்ந்தும், பிறசெயல்கள்செய்தும் அவ்வுலகு தன்னுடைமையாதல்காட்டிநிற்றலானும் பிறவற்றானும் உணரலாம். இவ்விறைவன், அவ்வுலகிடை நல்லோரைக் காத்து நல்லறத்தினை நிறுவுதல்மேற்கொண்டவன் என்பதனைக் கீதைமுதலிய பெருநூல்களானும் பிற சான்றுகளானும் அறியலாம். 'ஆரறத்தினோடன்றி நின்றாரவர்-வேரறுப்பென்' (கம்ப-ஆரணிய-அகத்திய-22) என்று மேற்கோள்கொண்டுநின்ற அவனது அவதார வரலாறுகளானும், இப்பெற்றியே, வையத்துற்ற மன்னர், நாடுகாவலைத்தாங்கி, அதன் நாயகராய் அமைந்து, அல்லோரையொறுத்து, நல்லோரைப்பேணி, அறத்தினையோம்பிநிற்றலின், அவர் கையேறு சக்கரக் காவலனது அமிசமாவரென்று கருதப்படுவோராயினரெனக.

இவ்வாற்றானே, ஒருநாட்டுக் குடிமக்கள் தம் முடிமன்னனைத் தம்மோடொத்தவொருவனாகக் கருதாது, தம்மைக் காக்கும் இறையென்று உயர்த்துப் போற்றுதல்பற்றி ஒருசிறிது உரைக்கப்பட்டது. இனி, முடிமன்னன் குடிமக்கள்பக்கற்கொள்ளுங் கருத்துப்பற்றிச் சற்றே ஆராய்வாம்.

மன்னவன், தன்னுயிர்போல மன்னுயிரனைத்தையும் காத்தல்வேண்டும் என்பது வழக்கு. அங்ஙனம் குடியோம்பலிற் சிறந்துநின்ற கொற்றவன், தன்னுயிர்போல மன்னுயிரைக்காக்குந் தண்ணளியானென்று யாவராலும் புகழ்ந்து போற்றப்படுவதூஉம் மரபு.

> ‘வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினான்
> உயிரெலாம் தன்னுயி ரொப்ப வோம்பலால்
> செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
> உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்.’
>
> (பால-அரசியல்-10)

என்ற கம்பராமாயணப் பாடலின்கண்ணே, தயரதச்சக்கரவர்த்தி இங்ஙனம் சிறப்பித்துரைக்கப்பெற்றிருத்தல் காண்க. ‘மன்னுயிரெல்லாம் மண்ணாள்வேந்தன்-றன்னுயிரென்னும் தகுதி’ (மணிமேகலை-7. 10) என்பதூஉம், மன்னன் மன்னுயிரைத் தன்னுயிரொப்பக் கோடல்வேண்டுமென்பதனை வலியுறுத்துதற்குக் காட்டப்படும் மற்றொரு சான்றாகும்.

இங்ஙனம், ‘கோனிகர்குடிகள்தம் கொள்கை சான்ற’தென்று புகழப்படுமாறு தன்னாட்டினை யாவரும் ஒக்கப் போகம்நுகரும் பொன்னாடென்று போற்றற்குரித்தாக்கி,மன்னுயிரைத் தன்னுயிரோடொப்பப் பேணும்மன்னன் றன்மையும், அங்ஙனம் தம்மைக் காத்தல்செய்துநிற்பானை அம்மன்னுயிரெல்லாம் தம்மோடொப்பக் கருதாது தமக்கிறையென்றுகருதும் மன்னுயிரியல்பும் ஒருங்கேயமைத்துத் ‘தன்போலுலகம் புரக்கின்றவாணன் தமிழ்த்தஞ்சையார்மன்’ (தஞ்சைவாணன்கோவை–295) என்று பொய்யாமொழிப்புலவர் புகன்றிருப்பது உற்றுநோக்கி யுணர்ந்து மகிழற்பாற்று. இவ்விருவரியல்புகளையும் இஃதுணர்த்துமாறு என்னையோவெனிற் காண்பாம்.

இது, தஞ்சைவாணன்மீது பொய்யாமொழிப்புலவர் பாடிய கோவை நூலின்கண் உள்ளது. தஞ்சைவாணனென்பான் பாண்டிநாட்டில் தஞ்சாக்கூரில் வாழ்ந்து அதனைத் தலைமையாகக்கொண்ட மாறைநாட்டிற்குத் தலைமைதாங்கிநின்ற ஒரு குறுநிலமன்னனென்றும், தஞ்சாக்கூர் என்பது தஞ்சையென மரீஇயிற்றென்றும், வாழ்நன் என்பது வாணனாயிற்றென்றும் அறிஞர் கூறுவர். ‘உலகம் புரக்கின்றவாணன்’ என்றும், ‘தஞ்சையார்மன்’ என்றும் இக்குறைத்த செய்யுட்பகுதியின்கண் வருவதனாலும் இவன் மன்னனாதல் உணரப்படும். இங்கு உலகமென்றது இக்கோவைத் தலைவனுக்குரிய

நாய்த் தஞ்சைநாடென்றும் மாறைநாடென்றும் வழங்கப்படும் நாட்டினை* யென்க.

இதன்கண், ‘உலகம்புரக்கின்ற வாணன்’ என்றதனானே, தஞ்சை வாணன் தஞ்சைநாட்டுக்கு மன்னனாய்நின்று அதனைப் புரத்தல் புலனாயிற்று. ஆகவே, மீண்டும் ‘தஞ்சையார்மன்’ என்றது கூறியது கூறலும் வெற்றெனத் தொடுத்தலுமாய் வற்றும் எனின், ‘தன்போ லுலகம் புரக்கின்ற வாணன்’ என்றதனானே தஞ்சைவாணன் அத்தஞ்சைநாட்டுமக்கள்பக்கற் கொள்ளுங் கருத்தும், ‘தஞ்சையார்மன்’ என்றதனானே அவர்கள் அவன்பாற்கொள்ளுங் கருத்தும் பெறவைத்தவாறுமாகலின் வற்றாதாயிற்றென்க. அஃதாமா றென்னையெனின், ‘தன்போ லுலகம் புரக்கின்றவாணன்’ என்றதனால் தஞ்சைவாணன் தன்னாட்டு மன்னுயிரனைத்தையும் தன்னுயிரோடொப்பத் தன்கருத்தால்நோக்கிக் காக்குமாறும், ‘தஞ்சையார்மன்’ என்றதனால், அவனது நாட்டுமக்கள் அவனைத் தம்மோடொத்தவனாகக்கொள்ளாது, தம் இறையாகத் தங்கருத்தால்நோக்கிப் போற்றுமாறும் பெறப்படுவனவா மென்க. இவ்வாற்றானே, இப்பகுதியொன்றனுள்ளே, மேலுரைத்த மன்ன னியல்பும், மன்னுயிரியல்பும் ஒருங்கே வந்தவாறு கண்டுமகிழலாம்.

இவ்வாறு உலகுகாவலன் ‘உயிரெலாந் தன்னுயிரொப்ப’ வோம்புகின் றான் என்று சிறப்பித்துரைக்கும் அடிப்பட்ட வழக்கையொட்டிக் கம்பரும் கூறியிருத்தல் முன்னர்க் காட்டப்பட்டது. இஃதொருபுறமிருக்க, நம் கவிச் சக்கரவர்த்தி இராமன்பக்கல் இன்னும் ஒருபடி மேற்செல்கின்றார். அதனைச் சிறிது ஆராய்வாம்.

பன்னெடுங்காலம் மகப்பேறின்மையால் வையகம் மறுகுறுமாலோ வென்பதோர் மறுக்கமுற்றிருந்த தயரதமன்னன், பின்னர் ‘முன்னை யூழ் வினைப்பயத்தினும் முற்றிய வேள்வி பின்னையெய்திய நலத்தினும் அரிதினிற் பெற்ற’ இராமபிரானுக்கு அரசுநல்குவானெண்ணி, வசிட்டமுனிவனும் சுமந்திரனும் உள்ளிட்ட மந்திரத்திருந்து தன்கருத்தை விரித்துரைத்தவுடன், அம்முனிவன் இராமற்கு அது தகுமென்பான் அப்பெருமானது ஏற்றமெல் லாம் எடுத்துக்கூறுமிடையில், அவன் குடிமக்கள்பக்கற்கொண்டுள்ள

* ‘வாணன் றமிழ்த்தஞ்சைநாட்டென் றனியுயிர்க்கோ-ரரண்மானனைய கண்ணாள்’ (தஞ்சை. 19) எனவும், ‘மாலன்ன வாணன்றென் மாறைநன் னாட்டு வயலுகளும்-சேலன்ன நீள்விழியாய்’ (தஞ்சை. 309) எனவும் வரு வனவற்றால் இவ் விருவழக்கும் உண்மை காணலாம்.

அன்பின்திறத்தை விளக்குவானாகி, 'இராமன்-தன்னுயிர்க்கென்கை புல்லிது தற்பயக்தெடுத்த-உன்னுயிர்க்கென நல்லன் மன்னுயிர்க்கெலாம் உரவோய்' (கம்ப-அயோத்தியா-மந்திர-38) என்று அரசனைநோக்கி உரைசெய்ததாக நம் கவிச்சக்கரவர்த்தி கூறியுள்ளார். இது, மன்னன் மன்னுயிரைத் தன்னுயிர்போல மதித்தலைக் கீழ்நிலைநிறுத்தி மேனிலைநிற்றல் வெள்ளிடைமலை.

இராமன் தன்னுயிருக்கு எத்துணைநல்லனோ அத்துணை நல்லன் மன்னுயிர்க்கும் எனின், அஃது அவனது உயரியல்பைக் குறைத்துக் குற்றத்தையேற்றியதாகுமென்று கவிஞர்பெருமான் கருதுகின்றார். அவன் தன்னுயிரிடத்துப் பெரியதோர் அன்புகொண்டவனென்பது அவனது இறைமைக் குணத்திற்குச் சிறவாதென்பது அப்புலவர்திலகத்தின் கருத்து. இராமபிரான், தன்னலங்கருதாது தனக்குரிய அரசும் போகமும் துறந்து கணையும் வில்லும் தாங்கிக் கானகத்தே அலைந்து, 'யான் வனம்போந்தது என்னுடைப் புண்ணியத்தால்' (கம்ப - ஆரணிய - அகத்திய - 18.) என்று தான் அவ்வாறு வனம்புகுந்ததனைப் பாராட்டிப் பிறர்க்குரிய நலத்தைப் பேணிநின்ற பெருவள்ளலன்றோ! இங்ஙனமாய இவனது இவ்வியல்புகுறித்தெழுதப்புகின் அது மிகவும் விரிவதொன்றாமன்றோ? ஆகவே, தன்னுயிரினும் சிறக்க மன்னுயிரை அவன் மதிக்கின்றானென்று சாற்றுதலே தக்கதாமென்பதூஉம், அங்ஙனம் மன்னன் மன்னுயிரை மதித்தலே மன்னர்க்குரிய மாட்சிகளுள் மிக்கதாமென்பதூஉம் அக் கவிதாசிரோமணியின் அபிப்பிராயமாகின்றன. இதனாலேயே, 'தன்னுயிர்க்கென்கைபுல்லிது' என்றாராயிற்று. இதன்கட் 'புல்லிது' என்றது, அங்ஙனம் மன்னுயிரைத் தன்னுயிரோடொப்பக்கொள்ளுதலாகக் கூறுங்கூற்று எட்டுணையேனும் இம்மன்னற்கு ஏற்புடைத்தாகாத இழிநிலையுடைத்தாதல் காட்டி, அதனை யெள்ளியுரைக்குமியல்தோன்ற நின்றது.

இங்ஙனம் இராமன் தன்னுயிர்க்கென மன்னுயிர்க்கு நல்லனென்பதனைப் புல்லிதென விலக்கிய ஆசிரியர், 'தற்பயக்தெடுத்த உன்னுயிர்க்கென நல்லன்மன்னுயிர்க்கெலாம் உரவோய்' என்ற பகுதியானே, அவனது அன்பின் நிலையினை விளக்கிச்செல்கின்றார். இதனானே, இராமன், தன்னினும் தன்னைப்பெற்றவனையே சிறக்க நேசித்தானென்பதூஉம், அத்தந்தைபக்கல் எத்துணையன்புகொண்டுநின்றானோ அத்துணையன்பு மன்னுயிரிடத்துங் கொண்டுநின்றானென்பதூஉம், இவ்வாறு அவன் பெற்றோனிடத்துவைத்த பேரன்பும் பிறவுயிரிடத்துவைத்தபேரன்பும் ஒன்றையொன்றொக்குமேயொழியப் பிற அவற்றை யொவ்வாவென்பதூஉம் பெற்றாம். பெறவே, அவன் மன்னுயிரிடத்துக்கொண்ட அன்பினளவு அறியப்படுவதாகின்றது.

இதனானே, அவன் மன்னுயிரைத் தன் தாதையோடொப்பக் கருதினான் என்றவாறாயிற்று.

மேலும், 'தற்பயந்த உன்னுயிர்க்கென' என்றது, பின்னர்த் தாதையாகக் கோடற்கொத்த நிலையுறுவார் பிறர்போலாது, தன் தோற்றத்திற்கு மூலமாய்நின்ற பயந்ததந்தையாகிய உன்னுயிர்க்கென என்றவாறுமென்க. எனவே, தற்பயந்தான் இவ்வுலகின்கண்ணே தன்றோற்றத்திற்கு மூலமாய் நிற்றல்போல, மன்னுயிரெல்லாம் தான் மன்னனாக் தோற்றத்திற்கு மூலமாதலும் ஈரிடத்தும் ஒக்க அன்புசெய்தற்குரிமையுண்மையும் தோற்றுவித்தவாறாயிற்று. மற்றும், 'எடுத்த உன்னுயிர்க்கென' என்றது, எடுத்தலென்பது வளர்த்தலென்று பொருள்படுமாதலால், தன்வளர்ச்சிக்குக் காரணமாய் நின்ற உன்னுயிர்க்கென என்றவாறாகி, ஆங்கே தன்னரசுநிலைவளர்ச்சிக்குக் காரணமாய மன்னுயிர், தன்னையெடுத்தானோடொப்ப அன்புசெய்தற்குரிமையுடைத்தாதல் புலப்படநின்றதாயிற்று. மன்னுயிரிலவாயின் மன்னனென ஒருவன் இலனாமாதலானும், மன்னனானவன் மன்னுயிர்நலம்பேணற்பொருட்டே பின்னரமைந்தானுமாதலானும் மன்னுயிரெல்லாம் மன்னன்றோற்றத்திற்கு மூலமாதலும், அவ்வாறே அவை அவனது அரசுநிலைவளர்ச்சிக்குக் காரணமாதலும் அறிக. 'அரசனும்-இல்வாழ்வாரில்வழியில்' (நான்மணிக்கடிகை-48) என்றதூஉம் காண்க. 'குடியுயரமுடியுயரும்' என்ற பழமொழியும் நோக்குக. 'நல்லன்' என்றது, அன்புடையனாய், அவ்வன்பு செய்யப்பட்டார்க்கு நல்லவை' நாடிச்செய்பவனென்றவாறு.

இவ்வாற்றானே, மன்னவன் மன்னுயிர்க்கு நல்லவைநாடிச்செய்வனவெல்லாம், தன்னைப் பயந்தார்க்குச்செய்யும் பணியோடொப்பக் கருதப்படுவனவாமென்பதூஉம், அப்பணியேபோல அவையும் தவிரத்தகாத கடனாகக் கொள்ளப்படும் நல்லறமாமென்பதூஉம் பெறப்படும். இங்ஙனம் கடனாகக் கொள்ளப்படுதலை, இராமன் அரசேற்க வியைந்ததுகுறித்துக்கூறும் கம்பநாடர் 'தாமரைக்கண்ணன் - காதலுற்றிலன் இகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்...............அப்பணிதலைநின்றான்' (அயோத்தியா - மந்திர - 70) என்று உரைப்பதனானும், நல்லறமாதலைத் தயரதன் தன் தனயனை நோக்கிப் 'புனையுமாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க - நினையல்வேண்டும்' (அயோத்தியா-மந்திர-69) என்று கூறி வேண்டியதனானும் அறியலாம்.

மக்களிற்பிரித்து அவர்க்கிறையென்று வேறுவைக்கப்படும் மன்னவன் அம்மக்கட்குத் தந்தையாகக் கூறப்படுதலன்றியும், ஓராற்றானே அம்மக்கட்கு மைந்தன்நிலையில்வைத்துக் கூறப்படுதலும் உண்டென்பதனை, நம்

கவியரசே 'சேய் ஒக்கும் முன்னின்றொரு செல்கதியுய்க்குநீரால்' (பால-அரசியல்-4.) என்று தயரதனைச் சிறப்பித்தலினானும், இராமன் தமக்கு அரசாதலின் அமைவுடைமைகாட்டித் தம்முவப்பை யெடுத்துரைத்த சிற்றரசரைநோக்கித் தயரதன், '"என்மகன் என்பதென் நெறியின் ஈங்கிவன்-நும்மகன் கையடைநோக்கும் ஈங்"கென்றான்' (அயோத்தியா-மந்திர - 85) என்றதனானும் அறியலாம். மற்றும்,

'பனையவாம் நெடுங்கரப் பருமயானையாய்
நினையவாம் தன்மையின் வியிர்த்த மன்னுயிர்க்
கினையவா றன்பினன் இராமன் ஈண்டவற்
கனையவா றன்பின அவையும் என்றனர்'

(கம்ப-அயோத்தியா-மந்திர-88)

எனவரூஉம் செய்யுளும் இங்குச் சிந்திக்கத்தக்கது. இராமன், மன்னுயிரிடத்துத் தன்னைப் பெற்றான்பக்கல் அன்புசெய்யுந்தன்மையில் எத்துணையன்புகொண்டுள்ளானோ அத்துணையன்பு அவையும் அவன்பால் வைத்துள்ளனவென்பது இதனால் உணர்த்தப்பட்டது. படவே, இராமன் மன்னுயிரைத் தந்தையோடொப்பக்கருதி அன்புசெய்யுமாறே அம்மன்னுயிரும் அவனைக் கருதி அன்புசெய்வனவாம் என்றவாறாயிற்று. இதனானே, மன்னுயிரிடத்து மன்னன் கொள்ளத்தகும் மனப்பாங்கும், அங்ஙனமே, மன்னனிடத்து மன்னுயிர்கொள்ளத்தகும் மனப்பாங்கும் ஒருங்கு விளங்குதல் அறியலாம்.

